# <u>கோயம்புத்தூர் மாநகராட்சி</u>

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

<u>ந.க.எண் : 12399 / 2010 / எம்சி. 8 நாள் : 11.12 .2010</u>

<u>அய்யா /அம்மா,</u>

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 14.12.2010 செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம்

## டிசம்பர் 2010

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| | **பொருளடக்கம்** |
| | அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | Jnnurm - நகர்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் திட்டம் - மூன்றாம் கட்டப் பணி - 9600 குடியிருப்புகள் கட்டுதல் - தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 2 | Jnnurm - பில்லூர் குடிநீர் திட்டம் - பகுதி 1 - MS பைப் குழாய் அமைத்தல் பணி - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 3 | பொறியியல் பிரிவு - சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் I-ன் கீழ் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது – ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |

நன்றியுரை

அ) **திருக்குறள்**

**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**
**இடங்கண்ட பின்னல் லது.**

**(குறள் 491)**

**விளக்கம்**

**ஈடுபடும் செயல் ஒன்றும் பெரிதல்ல என இகழ்ச்சியாகக் கருதாமல், முற்றிலும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்து அச்செயலில் இறங்க வேண்டும்.**

**திருவள்ளுவர்**

---

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளில் வசித்து வரும் நகர்ப்புர ஏழை மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளை மூன்று கட்டங்களாக ரூ. 443.55 கோடி மதிப்பில் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு கடந்த 28.02.2007, 21.03.2007 மற்றும் 29.10.2007ல் மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

முதல் மற்றும் இரண்டாவது கட்ட பணிகளாக மாநகரில் மொத்தமுள்ள 173 குடிசைப் பகுதிகளில், 80 குடிசைப் பகுதிகளில் வாழும் குடிசை வாழ் மக்களின், 12630 எண்ணிக்கை கொண்ட குடிசை வீடுகளை ஆர்.சி.சி. கூரையுடன் கூடிய குடியிருப்புகளாக அவ்விடத்திலேயே மாற்றியமைக்க தேவையான மானிய நிதி வழங்கி, அக்குடிசைப் பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தரும் பணிகளை ரூ. 258.75 கோடி மதிப்பில் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி திட்டத்தின் மூன்றாவது கட்டப் பணியான, மாநகரப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகள், நெடுஞ்சாலை ஓரங்கள், இரயில்வே துறைக்கு சொந்தமான நிலங்கள், தனியார் நிலங்கள் மற்றும் ஆட்சேபகரமான பகுதிகளில் நீண்ட காலமாக ஆக்கிரமித்து வசித்து வரும் 91 குடிசைப் பகுதிகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த பயனாளிகள் கண்டறியப்பட்டு, அவர்களை மாற்றிடங்களில் குடியமர்த்த ஏதுவாக மாநகராட்சிக்கு சொந்தமான உக்கடம் கழிவுநீர் பண்ணையில் 9600 எண்ணிக்கை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை ரூ. 184.80 கோடி மதிப்பில் அமைக்க மத்திய அரசு கடந்த 29.10.2007ல் ஒப்புதல் வழங்கியது.

மத்திய அரசின் அறிவுறுத்தலின் பேரில், கழிவுநீர் பண்ணையின் விவசாய நில உபயோகத்தினை குடியிருப்பு நில உபயோகமாக மாற்றம் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் 96.87 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தினை குடியிருப்பு நில உபயோகமாக மாற்ற அரசாணை (2டி) எண். 34 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை (யூடி 4-1) நாள். 03.02.2010ன் மூலம் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 134 எண்ணிக்கை கொண்ட தரை மற்றும் ஐந்து தளங்களை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ. 314.00 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு அரசின் நிர்வாக அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்கள் மூலமாக கடந்த 31.03.2010ல் முன்மொழிவுகள் மாநகராட்சியால் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தினை செயல்படுத்த தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் தற்போதுள்ள குறைந்த அளவு பணியாளர்களைக் கொண்டு, ஏற்கனவே அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டம், திடக் கழிவு மேலாண்மைத் திட்டம், பாதாள சாக்கடை திட்டம் மற்றும் சாலையோர மழைநீர் வடிகால் திட்டங்களை செயல்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் தற்போது நகர்ப்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டத்தினையும் கூடுதலாக கண்காணிப்பு செய்து, திட்டத்தினை திறம்பட மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

தற்போது, உக்கடம் கழிவு நீர் பண்ணையில் 2904 குடியிருப்புகளும், அம்மன்குளம் பகுதியில் 936 குடியிருப்புகளும் கட்டும் பணி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளது.

எனவே, தற்போது மாநகராட்சியால் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள 9600 குடியிருப்புகள் கட்டும் பணியினை தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்திடம் ஒப்படைப்பு செய்து அத்துறையின் மூலமாகவே அரசின் அனுமதிகளை பெற்று திட்டத்தினை செயல்படுத்த மாமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

(1) நகர்ப்புர ஏழை மக்களுக்கான அடிப்படை வசதி திட்டத்தின் கீழ் (பகுதி - III) உக்கடம் கழிவு நீர் பண்ணையில் மாநகராட்சியால் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள 9600 எண்ணிக்கை கொண்ட குடியிருப்புகளை, அடுக்குமாடி குடியிருப்புகளாக கட்டும் திட்டத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைப்பு செய்து அத்துறையின் மூலமே அரசின் அனுமதிகளை பெற்று திட்டத்தினை நிறைவேற்ற மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 11266/2009/ஜே.எண். 1

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 163 நாள் 14.12.2010</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி பில்லூர் குடிநீர் திட்டம் பகுதி I ன்கீழ் இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பிரதான மேல்நிலைத் தொட்டியிலிருந்து கிழக்கு மண்டல பகுதிகளுக்கு செல்லும் பிரதான குழாய்கள் பதிக்கப்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நிலையில் பீளமேடு, மசக்காளிபாளையம், சௌரிபாளையம், வரதராஜபுரம், நீலிக்கோணாம்பாளையம், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், SIHS காலனி மற்றும் நேதாஜிபுரம் பகுதியில் அடங்கிய வார்டு எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 பகுதி, 11 பகுதி மற்றும் வார்டு எண் 16 பகுதிகளில் குடிநீர் வழங்க பதிக்கப்பட்டுள்ள குடிநீர் ஏ.சி. குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் 450 மற்றும் 500 மி.மீ. விட்டமுள்ள ஏ.சி. குழாய்களுக்கு பதிலாக 900 முதல் 1000 மி.மீ. விட்டமுள்ள M.S./D.I. குழாய்கள் ரூ. 7.00 கோடி செலவில் சுமார் 6 கி.மீ. நீளத்திற்கு அமைக்க மாநில அரசின் “இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிதி” திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்ய 24.07.2009ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் தனது ந.க.எண். 39618/2009/LA3/ 29.10.2010ம் தேதிய கடிதத்தில் மானிய நிதியாக ரூ. 4.44 கோடி ஒதுக்கீடு செய்தும், மாநகராட்சி பங்கு நிதியாக ரூ. 256.00 இலட்சம் செலவழித்தும் பணியினை ரூ. 700 இலட்சம் செலவில் மேற்கொள்ள அனுமதி அளித்ததின் பேரில் மாமன்ற தீர்மானம் எண் 270 நாள் 12.03.2010-ல் ஒப்புதல் பெறப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கடந்த 09.04.2010ல் பிரேரணைகள் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் 2010-2011 ம் ஆண்டின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியல்படி விலை விகிதம் கணக்கிடப்பட்டும், தொழில்நுட்ப வல்லுனர் தி/ள். பிட்சனர் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்களால் தயாரிக்கப்பட்ட வடிவமைப்பின் படியும், பில்லூர் II வது குடிநீர் திட்ட இராமகிருஷ்ணாபுரம் மேல்நிலைத்தொட்டியிலிருந்து 1100 மி.மீ. விட்டமுள்ள பிரதான குடிநீர் குழழய் மற்றும் 700 மி.மீ. விட்டமுள்ள பிரதான குழாய் அமைக்கப்பட வேண்டுமென தெரிய வந்ததின்பேரில் கணக்கிடப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.50 கோடி செலவாகுமென தெரிய வந்தது.

எனவே MS Spirally Welded pipe / Ductile Iron pipe வடிவமைக்கப்பட்ட அளவின்படி பதிக்கப்படுவதற்குப் பதிலாக பார் ரேப்ட் ஸ்டீல் சிலிண்டர் பைப் ( Bar Wrapped Steel Cylinder pipe) பதிக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டதில் 6 கி.மீ. நீளத்திற்கு பதிக்க ரூ. 8.50 கோடி செலவாகுமென கணக்கிடப்பட்டு “இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறை நிவர்த்தி” செய்யும் நிதியாக விடுவிக்கப்படவுள்ள தொகை ரூ. 4.44 கோடி போக மீதம் தேவைப்படும் தொகை ரூ. 4.06 கோடியினை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்தோ (அல்லது) மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ செலவழித்து பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் தீர்மானம் எண். 77 நாள் 30.07.2010-ல் பெறப்பட்டது.

இந்நிலையில் கடந்த 15.09.2010 தேதியன்று தமிழ்நாடு வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டு குடிநீர் திட்ட செயலாக்கம் குறித்து உயர்மட்ட அலுவலர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில், குடிநீர் திட்டத்தில் பயன்படுத்தப்படும் குழாய்களில் 600 மி.மீ. விட்டத்திற்கும் அதிகமான விட்டமுள்ள குழாய்கள் பதிக்கப்பட வேண்டியிருப்பின் இரும்பு குழாயினை (MS pipe) பயன்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இரும்பு பைப்புகள் கொண்டு குழாய் பதித்தால் மதிப்பீடு தொகை மேலும் கூடுதலாகும் என்பதால் தற்போதைக்கு 6.00 கி.மீ. நீளத்திற்குப் பதிலாக 5.70 கி.மீ. நீளத்திற்கு மட்டும் ரூ. 8.50 கோடி செலவில் தொழில்நுட்ப கலந்து ஆலோசகர் தெரிவித்துள்ள வடிவமைப்பின்படி 1100 மி.மீ. மற்றும் 700 மி.மீ. விட்டமுள்ள M.S. பைப் குழாய் அரசின் நிர்வாக அனுமதி பெற்று அமைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**(O &.M Gap filling fund 2009-2010)**

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) இலட்சத்தில் | அரசு மானியத் தொகை ரூ. இலட்சத்தில் | மாநகராட்சி பங்குத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலைத் தொட்டியிலிருந்து சிங்காநல்லூர் வரையிலான பிரதான குழாய் மெயின் 500/400 மி.மீ. விட்டமுள்ள ஏ.சி. விநியோக மெயினுக்கு பதிலாக 1100/ 700 மி.மீ. விட்டமுள்ள இரும்பு குழாய் (MS pipe) 5.70 கி.மீ. நீளத்திற்,கு அமைத்தல் பணி | **850.00** | **444.00** | **406.00** |

அலுவலகக் குறிப்பு-

ஆ). மாமன்றம் தீர்மானம் எண் 77 நாள் 30.07.2010 ஐ ரத்து செய்யலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்குண்டான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 850.00 இலட்சத்தில் அரசால் இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் மானிய நிதியிலிருந்து விடுவிக்கப்படும் மானியத் தொகை ரூ. 444.00 இலட்சத்துடன் மாநகராட்சி பங்குத் தொகையான ரூ. 406.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் திட்ட தொகையிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ செலவழித்து, 5.70 கி.மீ. நீளமுள்ள (MS pipe) இரும்பு குழாய் பதித்தல் பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) அரசின் நிர்வாக அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண் 7504/09/ஜே.என். 4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 164 நாள் 14.12.2010</u>

அலுவலகக் குறிப்பு 'அ' ' ஆ' 'இ' அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

### பொருள் எண் 3

பொருள்:- கோயம்புத்தூர் மாநகராட்சி — சிறப்பு சாலைத் திட்டம் 2010 – 2011ல் சிப்பம் I-ன் கீழ் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பாக.

*********

அரசாணை G.O (Ms) எண் - 210 நாள் 9.9.2010ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அரசாணையின்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ. 520.86 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை மூன்று சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 25910/2010/E3 நாள் 18.9.2010 அன்று உத்தரவு வழங்கியுள்ளார்கள்.

இவற்றில் முதல் சிப்பத்திற்கு ரூ.188.27 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 1.11.2010 அன்று முதல் அழைப்பாக பெறப்பட்டதில், மாமன்றம் தனது தீர்மான எண் 144 நாள் 18.11.2010-ல் மறு ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன் பேரில் 6.12.2010ம் தேதியன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

(1) திரு/ள் எஸ்.பி.பில்டர்ஸ், சென்னை.
(2) திரு/ள் முரளி அன் கோ, ஊட்டி.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை 9.12.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டதில் திரு/ள் எஸ்.பி.பில்டர்ஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது கண்டறியப்பட்டது. திரு/ள் முரளி அன் கோ, ஊட்டி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தகுதி பெறவில்லை எனவும் கண்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து 10.12.2010ல் தகுதி பெற்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி உறை திறக்கப்பட்டதில் திரு/ள் எஸ்.பி.பில்டர்ஸ், சென்னை நிறுவனத்தினர் 19.96% மதிப்பீட்டிற்கு கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இந்நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளியினை மேலும் குறைத்துக்கேட்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி இந்நிறுவனத்தினிடம் மேலும் விலைப்புள்ளியினை குறைத்துக்கேட்டு 10.12.2010 அன்று கடிதம் அளிக்கப்பட்டது. இந்நிறுவனம் முதலில் அளித்திருந்த 19.96% மதிப்பீட்டிற்கு அதிகம் விலையினை மேலும் குறைத்து 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் கொடுத்துள்ளது.

10.12.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு கூட்டத்தில் மதிப்பீட்டிற்கு 4.99% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு/ள் எஸ்.பி.பில்டர்ஸ், சென்னை அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாமென திறனாய்வுக்குழு பரிந்துரை செய்துள்ளது. எனவே இப்பணிக்கு விலைப்புள்ளியினை 4.99% அதிகம் கொடுத்துள்ள திரு/ள் எஸ்.பி.பில்டர்ஸ், சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:-
1. அனுமதிக்கலாம்
2. மதிப்பீட்டை காட்டிலும் கூடுதல் செலவினம் ஆகும் தொகையினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொறியியல் பணி விதிகளின்படி (Engineering Manual) மதிப்பீட்டிற்கு 5% வரை கூடுதல் பெறப்பட்ட இப்பணிகளுக்கு அவசர அவசியம் கருதி மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:- 10584/2010/எம்டி3

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 165 நாள் 14.12.2010</u>

அலுவலகக் குறிப்பு 1, 2, 3 ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

சிறப்புத் தீர்மானம் எண் 1

உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு 2010 நடைபெற இருந்த சமயத்தில் போக்குவரத்து வசதிகளை சீர்செய்யும் வகையில் கோவை கிருஷ்ணராயபுரம் கிராமத்தில் உள்ள எஸ்.என்.ஆர்.கல்லூரி இணைப்புச் சாலை அமைப்பதற்கு எஸ்.என்.ஆர்.சன்ஸ் நினைவு அறக்கட்டளையினர், 33,644 சதுர அடி (சுமார் 77 சென்ட்) இடத்தை அரசு வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் வழங்கியுள்ளனர்.

இச்சாலை அமைக்கப்பட்டது கோவை மாநகரின் போக்குவரத்திற்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளதால் பெருமளவில் போக்குவரத்து நெரிசல் சீரமைக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சாலை அமைப்பதற்கு இடம் வழங்கிய எஸ்.என்.ஆர்.சன்ஸ் நினைவு அறக்கட்டளையினரின் நினைவாக "டாக்டர் எஸ்.என்.ஆர். வெங்கடேசலு சாலை" என்று பெயர் வைக்க வேண்டுமென்று சிறப்பு தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமாய் திராவிட முன்னேற்றக் கழக மாமன்றக்குழுவின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

<u>சிறப்பு தீர்மானம் எண். 1 நாள். 14.12.2010</u>

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி